சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

VOL. 10. தொகுதி - 10. | September. செப்டம்பர் 1914. | No - 2. பகுதி - உ.

உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு.

இல்வாழ்க்கை நிலைக்குச்சொல்லுகின்ற நெறிக்கணின்றொழுக வேண்டுமென்று விரும்புகின்றவன் தன் மனைவி தனக்கொத்த கருத்துடையவளா யொழுகாதிருப்பாளாயின், அவன் தான் மேற்கொண்ட இல்வாழ்க்கை நிலையினைக் கடைபோகச்செய்து முடிப்பது ஒருவாற்றானு முடியாததாம். இல்லின்கணிருந்து வாழுகின்றவனது அறம் அவனது மனையாள் நற்குணநற்செய்கைகளையுடையவளாயிருந்தாற்றான் சிறந்து விளங்குவதாம். கொண்டான் ஒருவழியிற்செல்ல, கொண்டவள் பிறிதொருவழியிற்செல்ல நடைபெறும் இவ்வாழ்கை ஒருவாற்றானும் சிறப்படைவதில்லையாம். கணவனும்மனைவியும் இல்வாழ்க்கையை நடத்துவதற்கு ஒருவண்டியிற் பூட்டிய இரண்டெருதுகள் போன்றிருக்கின்றனர். ஒருவண்டியிற் பூட்டிய இரண்டெருதுகளுள் ஒன்று மாறுபட்டுச் செல்லுமாயின், அவ்வண்டி குறித்தவிடத்திற்குப்போவது முடியாதன்றோ? அவ்வாறே கணவன் மனைவியென்னு மிருவருள் ஒருவர் மாறுபட்டவிடத்து இல்வாழ்கையானது இனிது நடைபெறுவதில்லையாம். இல்வாழ்க்கை கணவன் மனைவியென்னுமிருவருள் எவரால் இனிது நடைபெறுகின்றதென்று நன்கு சீர்தூக்கிக் கவனிப்போமாயின், அது மனைவியாலேயே இனிது நடைபெறுவதாமென்பது நன்குவிளங்கும். ஒருவன் நற்குண நற்செய்கைகளுக்கெல்லா முறைவிடமா யிருப்பவனாயிருந்தாலும், அவன்மனைவி அவனுக்கு மாறுபட்டவளாயிருப்பாளாயின், அவனது இல்வாழ்க்கைஇடு(சுடு)

காட்டு வாழ்க்கைபோன் றிடர்ப்பாடுடையதே யாகும். மனைவி நற்குண நற்செய்கைகளுக் குறைவிடமா யிருப்பாளாயின், கணவன் நற்குண நற்செய்கைகளை யுடையவனுயிருத்தல் வேண்டுமென்பதவசியமன்று. பெண்களுக்குத் தம்புருஷரை தம்வசமாகச் செய்தல் மிகவெளிதாமாகலின், மனையாள் நற்குண நற்செய்கைகளை யுடையவளாயிருப்பதே இல்வாழ்கை யினிது நடைபெறுவதற்குச் சிறந்த காரணமாம்.

மனைவி ''கணவனுக்கினியளாய் மிருதுபாஷிபாய்'' இருப்பாளாயின், கணவன் தான் எவ்வளவு குரூரத்தன்மை யுடையவனுயிருப்பினும், அதனை யடக்கிக்கொண்டு, அவள் கூறியவாறே செய்யத்தொடங்குகின்றான். ஒரு வண்டியிற் பூட்டிய இரண்டெருதுகளுள் ஒன்று குறித்தவிடத்திற்குப் போவதும் வன்மையுடையதுமாயிருக்குமாயின், மற்றென்றன் முரட்டுத்தன்மை அதனிடத்துச் செல்லாதாம்; ஆனல் அம்முரட்டெருது நேர்மையுள்ள எருது போம்வழியே போகவேண்டியதாம். இங்ஙனமே மனைவி நேர்மையுடையவளா யிருப்பாளாயின், நற்குண நற்செய்கை யில்லாத கணவனுடைய பிடிவாதம் பெரும்பான்மையும் முடிவுபெறுகதாம். இதனல் இல்வாழ்க்கை மனைவி நற்குண செய்கையில்லாதவளாயின், இனிது நடைபெறாது; உடையவளாயின், இனிது நடைபெறுமென்பது இனிது விளங்குவதாம்.

''ஐயருக் கமுதுபடை யென்றுவந் தாய்நீயு மாண்பிள்ளையென்றெண்ணவோ, அரிசியெங் கேபானை சட்டியெங் கேயென்பள் அவள்சொன்ன வகைகளெல்லாம்; பையவே கொண்டுவந் தாலும் சமைக்கப் படாதுதலை நோகுதென்று, பாயிற் கிடப்பள்சினமாயொன்று பேசினல் பாருனக் கேற்றபுத்தி; செய்யவல் லேனென்பள் சற்றடித் தால்நஞ்சு தின்கிறேன் கூகூவெனத், தெருவீடுதோறுமுறை யிடுபெண்டி ருண்டெனிற் றீய நமன் வேறுமுண்டோ.'' என்று திருவேங்கடசதகங் கூறியவாறு மனைவி யிருப்பாளாயின், கணவனது நற்குண நற்செய்கைகள் என்னபயனுடையனவாம்?

கணவனது தீக்குண தீச்செயல்களை வெளியிடாதடக்கி, இல்வாழ்க்கையை யினிது நடத்துகின்றவள்தான் பெண்டிரென்னுஞ் சொற்கு உண்மையாய பொருளாவள்.

" நல்விருந் தோம்பலின் நட்டாளாம் வைகலும்
இல்புறஞ் செய்தலி னீன்றதாய்—தொல்குடியின்
மக்கட் பெறலின் மனைக்கிழத்தி யிம்மூன்றுங்
கற்புடையாள் பூண்ட கடன். "

என்று திரிகடுகங் கூறுவதால், கற்புடைய மனைவியின் உத்தமச் செய்கை யினிது விளங்கும். மனைவி உண்டி சுருங்குதல் முதலிய உத்தம குணங்களை யில்லாதவளா யிருந்தால், அவள் விருந்தினரை யுண்டி முதலியனதந் துபசரித்தல், இல்வாழ்க்கையை யினிது நடைபெறச் செய்தல், சந்ததி விருத்திக்காகத் தான் பெற்ற மக்களைச் செவ்வையாகக் காப்பாற்றுதல் என்பனவற்றைச் செய்வ தெப்படியாம்? மனைவி தன் கணவனுக்கு வந்த விருந்தினரை நல்வரவுகூறி யழைத்து, உண்டி முதலியன தந் துபசரித்தலால் நட்டாளாக விருக்கின்றாள்; இல்வாழ்க்கையை முட்டில்லாது நடத்துதலால் அன்னையாக விருக்கின்றாள்; சந்ததி விர்த்திக்காக மக்களைப் பெறுதலால் பெண்டிராக விருக்கின்றாள். இவ்வாறிருக்கும் பெண்டிர் உண்டி சுருங்குதல் முதலியவற்றை யுடையவராயிருப்பது ஒருதலையாம். (ஒருதலை — நிச்சயம்).

குசேல முனிவருடைய பெறலருங் கற்பின் கிழத்தியாகிய சுசீலையின் சரித்திரத்தினைச் சற்று நிதானமாகப் படித்துப்பார்ப்பவர்க்கு "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்பது நன்கு விளங்கும்.

உணவினைக்குறைத் துண்ணுதல் மனைவியர்க்குச் சிறந்தஇலக்கணமாமென்பது 'உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு' என்பதன் பொருளாம். உண்டிசுருங்குதல்என்றுகூறப்பட்டதாயினும், "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்னுமுபலக்கணத்தால், ஆடையாபரணங்கள் முதலியவற்றை யளவிற்குமிஞ்சிக் கேட்டலிற் சுருங்குதல் முதலியவற்றையுங் கொள்ளுதல் வேண்டும்.

சுசீலை உண்டிசுருங்குதல் முதலியவற்றை யுடைத்தாயிருந்தமையாலன்றோ; தமது 27 பிள்ளைகளைக் காப்பாற்றியதுடன், தமது நாயகராகிய குசேலர்க்கும் மனங்கோணுவாறு நடந்துவந்தனர். அவ்வம்மையார் வயிறுதாரியாயிருந்து, தமது கணவராகிய குசேலரை அதுவேண்டும்; இதுவேண்டும் என்று தொந

தரவு செய்து வந்தாராயின், அவரது வாழக்கை என் பட்டுவிடும்? கொழுக்கொம்பின்றிய கொடிபோன்றன்றோ அலைந்து விடும்.

மனையாள் மருத்துவ முறைப்படி யுண்டு வருவாளாயின், அவள் தன் கணவனையும் மக்களையும் மருத்துவ முறைப்படி யுண விட்டுப்பாதுகாத்து, வருதற்குரியவளாவள். அவ்வாறொழுகுகின்றவள் தன்னை நோயில்லாது பாதுகாத்துக்கொள்வதுடன், தன் கணவனையும், மக்களையும் நோயில்லாது பாதுகாத்தற்கு முரியவளாகின்றாள். இங்கு உண்டிசுருங்குதல் என்பது உணவினை மிகவுங்குறைத்துண்ணுதலன்றாம்; ஆனால், அரைவயிறு அன்னமுண்டு, கால்வயிறு நீருண்டு, கால்வயிறுகாற்றுலாவவிருப்பதாம். இவ்வாறு உண்பதே இங்கு உண்டிசுருங்குதலாம். இது மிதாகாரமெனப்படும். இவ்வாறு உணவினைக் கொள்ளும் பெண்டிருடைய இல்வாழ்க்கை பெரும்பான்மையும் நோயால் வருந்துவதில்லையாம். பெரும்பான்மையும் நோய்வருதற்குக் காரணம் அளவறிந் துணவினை யுண்ணாமையேயாம்.

உண்டிசுருங்குதலில்லாத மனைவி மிதமிஞ்சி யுணவினைக் கடன்வாங்கியேனும் புசித்து, தனது குடும்பத்தைத் தரித்திரமுடையதாகச் செய்பவளாயிருத்தலின், அவள்வாழுமிடம்மூதேவி வாழுமிடமாம்; அவள் கணவனும் மக்களும் நோய்க்கும் தரித்திரத்திற்கும் எந்நாளு முறைவிடமாயிருப்பரென்பதற்கு ஆட்சேபமேயின்றாம். "ஏர்பிடித்தவன் என்னசெய்வான்; பானைபிடித்தவள்பாக்கியம்" என்னும் பழமொழியை நன்கு கவனித்துநோக்குவோமாயின், மனைவியினது நற்குண நற்செய்கைகளே கணவனுடைய மேன்மைக்குக் காரணமாமென்பது விளங்குமன்றோ? கற்புடைய பெண்டிர் உண்டிசுருங்குதலுடையவரா யிருத்தலையன்றி, தமது நாயகரை நோக்கி, ஆடைவேண்டும்; அணிவேண்டும்; அபலார்த்த வேடிக்கையாகப் போகவேண்டுமென்று கேட்டவிலும் சுருங்குதலுடையவரா யிருப்பர்; தமது தாய்வீட்டுக்குப் போகவேண்டுமென்பதிலும் மிகச் சுருங்கிய மனமுடையவராயிருப்பர்; தமது கணவரையன்றி வேறு தெய்வங்களை வணங்குவதிலும் சுருங்கிய நெஞ்சுடையவரா யிருப்பர்; தமது மங்கல நாண் நீண்டகாலம் இருத்தல்வேண்டுமென்று விரும்புவதன்றி மற்றையவற்றை விரும்புவதிலும் மிகச் சுருங்கிய கருத்துடையவரா யிருப்பர்; அன்னியரை நோக்குவதிலும் மிகச்சுருங்கிய அகமுடையவராயிருப்பர்.

இவ்வாறெழுகும் பத்தினிப் பெண்டிர் தமது நாயகரது வருவாய்க்குத் தக்கவாறு பொருளை யில்வாழ்க்கையில் செலவு செய்து, இல்வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை வாங்கவேண்டியகாலங்களிலே வாங்கி வைத்துக்கொண்டு, தம்வீடு நோக்கி வந்த துறவினர் விருந்தினர் முதலாயினோரைத் தமது கணவரோடிருந்து, உண்டி முதலியன தந்து உபசரித்து வருவர். உண்டி சுருங்குதல் முதலியவற்றையுடையபெண்டிரைப் பெற்றவர் நற்குண நற்செய்கைகளை யுடையவராயிருப்பாராயின், அவரது இல்வாழ்க்கை பொன்மலர் நாற்றமுடையது போலப் பொலிவு பெற்று விளங்குமென்பதற்கு யாதோர் ஐயப்பாடு மின்றாம்.

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

(மனையறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கைகளை யுடையளாய்த் தன்னைக்கொண்டவனது வருவாய்க்குத்தக்க வாழ்க்கையுடையாள் அதற்குத்துணை)" என்று திருக்குறள் கூறுவது இங்கு நன்குணர்தற்பாலதாம்.

சுக நூல்.

(பாலபாடம்)

2-ம் பாடம்.

சரீர யந்திரம் எப்படி வளர்கின்றது? எப்படித் தன்னைப் பழுது பார்த்துக்கொள்கின்றது?

நீங்கள் ஒரு சுவரைக் கவனித்துப் பார்த்து, அது செங்கல் அல்லது கருங்கல் முதலிய வஸ்துக்களால் கட்டப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளுகிறீர்களல்லவா?

நமது சரீரத்திலும் அநேக வஸ்துக்கள் உண்டு. அது ஒரு சுவரைப்போலக் கட்டப்படுகிறதுமில்லை, பழுதுபார்க்கப்படுகிறதுமில்லை. சுவரைக் கட்டும்போது, கொற்றன் செங்கல்களை ஒன்றின்மே லொன்றாக, அடுக்கி, அவற்றைச் சுண்ணும்புச் சாந்தால் இணைத்து விடுகிறான். அவன் வேலை செய்வதை ஸகலரும் பார்க்கலாம். நமது சரீரம் அம்மாதிரியாகக் கட்டப்படவில்லை.

அது வளருந்தன்மை யுடையது; ஒருவர்க்குந் தெரியாமல் தன்னைத்தானே பழுது பார்த்துக்கொள்ளும் சுபாவமுடையது. வாஸ்தவத்தில், ஒரு சிசுவினுடைய வளர்ச்சியை, அதனை நிறுத்துப் பார்த்தாலொழிய, வேறுவிதமாகத் தெரிந்து கொள்வது கொஞ்சம் பிரயாசந்தான்.

நமது சரீரத்தினுடைய கொற்றனைப் பார்த்தல் முடியாது. அவன் இருந்துகொண்டுதா னிருக்கிறான். இரத்தமே கொற்றன். அவன் சரீரத்தின் எல்லா உறுப்புகளிலும் புகுந்து, ஆங்காங்குக் கட்டடத்துக்கு வேண்டிய சாமான்களைக் கொடுத்துக்கொண்டும், தேய்ந்து, கெட்டு, பிரயோஜனமில்லாத, வெளியே தள்ளிவிட வேண்டிய சாமான்களைச் சுமந்துகொண்டும், நமது சரீரத்துக்குள்ளே ஓயாமல் சுற்றிக்கொண்டிருக்கிறான்.

அச்சாமான்களோ கொற்றனுக்கு நம்முடைய ஆகாரத்தின் வாயிலாகக்கிடைக்கின்றன. ஆனால் தசை, எலும்பு, மயிர் இவைகளெல்லாம் ரொட்டிகளன்று, சாதமல்ல, கீரைகளுமன்று. ஆகையால்நாம்சாப்பிடும்ஆகாரம் நமது சரீரத்துக்குள்ளே சில மாறுதல்களை அடைகின்றன வென்பது நன்றாக விளங்கிவிட்டது. அவ்வாகாரத்தின் சத்தானபாகம் உபயோகப்படுகின்றது; அசத்தான பாகம் வெளியே தள்ளப்படுகின்றது. மிகவும் பிரதானமான இச்செய்கைக்கு ஜீரணம் என்று பெயர். இதுபற்றி விவரமாகப் பின்பு சொல்லப்படும்.

3-ம் பாடம்.

சரீர யந்திரத்துக்குச் சூடேற்றுதல்.

சரீரம், மற்ற ஸகல யந்திரங்களையும் போலவே, கரியாலேதான் சூடேற்றப்படுகின்றது. அதற்குக் கரி எங்கிருந்து கிடைக்கின்றது? நம்முடைய ஆகாரத்தினின்றுதான். உணவுப் பொருள்களிலெல்லாம் கரி உண்டு. ஒரு ரொட்டித்துண்டை நெருப்பில் போட்டுப்பார். சிறிது நேரத்திற்குள்ளே கரியாகிவிடும். மிகவும் வெண்மையான சர்க்கரையிலும் கரி அதிகம். கரியை ஏற்றிக்கொண்டு, அங்கங்கே கொடுத்துக்கொண்டு போகிறதார்? சரீரமுழுதும் எங்கும் செல்லுகின்ற இரத்தந்தான். இரத்தம் நமது சரீரத்துக்குள்ளே எப்படி ஓடிக்கொண்டிருக்கின்றது என்பதும் பின்பு விவரமாக எழுதப்படும்.

அக்கரி எரிவதற்குவேண்டிய காற்றெங்கே? கரிஎரிவதற்குப் பிராணவாயு அவசியம் வேண்டுமென்பது நமக்குத் தெரியுமல்லவா? நமது சுவாசத்தினாலே, வெளிக்காற்று மூக்கின் வழியாகவோ, அல்லது வாய் வழியாகவோ, சரீரத்துக்குள்ளே செல்லுகின்றது. அக்காற்றையும் இரத்தந்தான் எங்கும் இழுத்துக்கொண்டு போகின்றது.

கரி எரிவதற்கு அடுப்பெங்கே? புகைவண்டி முதலிய ஸகல யந்திரங்களிலும் பிரத்தியேகமாக ஒரு அடுப்பு உண்டல்லவா? அந்த விஷயத்தில் நமது சரீரம் மிகவும் மேன்மையுடையது. இதற்கு ஒரு தனி அடுப்பில்லை. அநேககோடி அடுப்புகளிருக்கின்றன. சரீரத்தினுடைய ஸகல உறுப்புகளிலேயும் கரி எரிகின்றது.

4-ம் பாடம்.

சரீர யந்திரத்துக்குச் சக்தி உண்டாகும் வகை.

புகை வண்டியினுடைய அடுப்பிலே எரியும் கரியானது அந்த யந்திரத்தைச் சூடாக்குவதுந் தவிர, அதற்கு ஒரு சக்தியையுங் கொடுக்கின்றது. அச்சக்தியினாலே தான் புகை வண்டி அசைய ஆரம்பித்து, மற்ற வண்டித் தொடர்களை இழுத்துக்கொண்டு ஓடுகின்றது.

நமது சரீரத்துக்குள்ளேயும் கரி எரிவதினாலே, நமக்கும் ஒரு சக்தி உண்டாகின்றது. நாம் நடப்பதும், ஓடுவதும், சுமைகளைத் தூக்கிக்கொண்டு போவதும், வேலை செய்வதும் அச்சக்தியினாலே தான்.

உனது வலது காத்தை நீட்டு. அதனை முழங் கைக்குமேலே இடது கையால் பிடித்துக்கொண்டு, அப்படியே மெதுவாக மடக்கு. உன்னுடைய கைக்குள்ளே ஒரு மாம்ஸக் கட்டியின் உணர்ச்சி ஏற்படும். முன் கையின் எலும்புகளைத் தோளின் எலும்புகளுக் கருகே கொண்டு போவதற்காக, அக்காத்தின் ஒரு தசையானது சுருங்கி உப்பும்படி நேரிட்டது. நமது சரீரத்தினுடைய தசைகளெல்லாவற்றுக்கும் இதே கதிதான். உள்ளே எரியும் கரியே அவற்றின் சக்திக்குக் காரணம்.

5-ம் பாடம்.

சரீரயந்திரம் எப்படி ஆளப்படுகின்றது?

இவ்வளவு தேர்ச்சியும் சன்னல் பின்னலுமான சரீர யந்திரத்தை நடத்துவது மிகவும் கஷ்டமென்று எவரும்நினைத்தல்கூடும்.

உண்மையில் அப்படியல்ல. மூளையானது அந்த யந்திரத்தை மிகவும் சுலபமாகவும், சிறிதேனும் பிசகில்லாமலும், அநேகமாய் நமக்குத் தெரியாமலேயே நடத்திக்கொண்டு வருகின்றது. சரீரத்தினுடைய ஸகல அவயவங்களையும் நரம்புகளின் வழியாய்க் கண்காணிக்கின்றது. நமது சரீரத்துக்குள்ளே இருக்கும் நரம்புகளுக்குக் கணக்கில்லை. அவற்றாலே தான் மூளையினுடைய ஏவல்கள் அந்தந்த அவயவங்களுக்குச் செல்லுகின்றன. அவற்றாலே தான் மூளையானது அந்தந்த உறுப்புகளின் ஸ்திதிமுதலிய சகல விஷயங்களையும் தெரிந்து கொள்ளுகின்றது.

என்ன அழகான அமைப்பு! என்ன ஒழுங்கான ஏற்பாடு! அதுபற்றி விவரமாகத் தெரிந்து கொள்வதில் பிரயோஜனமுண்டு. நாம் முக்கியமாய் அந்த ஒழுங்கைப் பங்கப் படுத்தாவண்ணம் நடந்துகொள்ளவேண்டும். அப்போது தான் சுகமுண்டு.

மேற்கண்ட பாடங்களிலிருந்து, பின்வரும் விஷயங்களைப் பற்றி விவரமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய தவசியமென்றேற்பட்டது. அவை

1. ஆகாரம் - ஜீரணம்.
2. இரத்த ஓட்டம்.
3. சுவாசம்.
4. தேக உஷ்ணம். அதனைக்காக்கும் உடை, வாஸஸ்தானம்.
5. தசை, எலும்பு.
6. மூளை, நரம்பு.

என்பனவாம்.

ப்ரொபஸர். N. சுப்ரமணிய ஐயர்,
புதுச்சேரி.

THE HEROINES OF INDIA.

வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள்

கனு (Khana). ஜோதிடசாஸ்திரத்தில் தன்னிலும் மிக்கார் ஒருவருமில்லையென ஓர் மாது சிறந்தோங்கி யிருந்தனள். இவள் கனு (Khana) என்னும் பெயருடையாள். இவளது வம்ச பரம்பரை இன்னும் ஆராய்ச்சிக் குட்படுத்தப்பட்டு வருகிறது. பெற்றோர்கள் இன்னாரென்று தெளிவாகத் தெரியாவிடினும், இவள் இராக்ஷஸர்களால் (அஃதாவது அநாரியர்களால்) வளர்க்கப்பட்டு ஜோதிடசாஸ்திரம் கற்றுக்கொடுக்கப்பட்டனள் என்று மட்டும் நமக்கு நன்றாகத் தெரிகின்றது. இம்மாது அதிக ஞாபக சக்தியுள்ளவள். எப்போதும் ஜோதிடசாஸ்திரப் பயிற்சியிலேயே காலத்தை இடைவிடாது தன்மனதைச் செலுத்தி அபார தேர்ச்சி பெற்றனள். ராக்ஷஸர்கள் மிஹிர் (Mhir) என்னும் ஜோதிடசாஸ்திர வல்லானுக்கு இவளை மணம் செய்வித்தனர். இந்த மிஹிர்(Mhir) என்பவன் யாரென்றால், விக்ரமாதித்திய ராஜன் அரண்மனை வித்வான்கள் ஒன்பதின்மருள் ஒருவனாகிய வராஹன் (Varaha) என்பவனுடைய புதல்வனாவன். வராஹன் ஜோதிடசாஸ்திரத்தில் நிபுணன். அவனுக்கு ஒரு குமாரன் ஜனித்தபொழுது அவன் அந்தக் குழந்தைக்கு ஆயுள் 10 வருடந்தான் என்று ஜோதிட ஞானத்தால் கணித்துத் தெரிந்து கொண்டான்; பத்துவருடம் வரைக்கும் வைத்து வளர்த்து அன்பு பாராட்டிப் பின் இழப்பதைவிட பாசத்திற் கேதுவான இக்குழந்தையை இப்போதே இழப்பது நலமென்று தீர்மானித்து ஒரு மண்பாண்டத்தில் அக்குழவியை வைத்து ஓர் ஆற்றில் மிதந்து செல்ல விடுத்தனன். ஸ்நானத்திற்காக ஆற்றங்கரைக்குச் சென்ற சில ராக்ஷஸ ஸ்திரீகள் நீர்மேல் மிதந்து வரும் பானையைப் பிடித்துப்பார்க்க அதில் ரூபலாவண்ணியத்துடன் ஒரு சிசு இருக்கக் கண்டனர். அக்குழந்தைமேல் இரக்கங்கொண்டு அந்த இராக்ஷஸ ஸ்திரீகள் தங்கள் வீட்டிற்கு எடுத்துக்கொண்டுபோய் வளர்த்துவருநாளில், குழந்தையின் புத்தி சூக்குமத்தைக்கண்டு அதற்குத் தக்கவயது வந்தகாலத்தில் ஜோதிட சாஸ்திர ஞானத்தை ராக்ஷஸர்கள் புகட்டிவந்தனர். இந்தப்பையன் ஜோதிடசாஸ்திரத்தில் அதிக நிபுணத்தன்மையை யடைந்தனன். இவனைத்தான் கனு (Khana) என்னும் மாதுக்குப் பாணிக்கிரஹணம் செய்துகொடுத்தனரென்று மேலே கூறப்பட்டது. இவ்வது

வர்கள் சிலநாள் இராக்ஷஸர்கள் மத்தியில் சுகபோகிகளாயிருந்து, பின் தங்கள் மரபினர்களாகிய ஆரியர்களிடஞ்செல்ல விருப்பங்கொண்டு இராக்ஷஸர்களுடைய சம்மதம் பெற்று ஆரியர்கள் வசிக்கும் பிரதேசம் செல்லப் பிரயாணஞ் செய்தனர். வழியில் விக்ரமாதித்திய மகாராஜன் வேட்டையாடிக்கொண் டிருந்த இடத்தைக் கிட்டினர். அவ்வரசன் வித்யானுபாலனென்று உணர்ந்து அவன் சமுகஞ் சென்றனர். இவர்களுடைய ஜோதிடசாஸ்திர ஞானத்திற்கு அரசன் மெச்சி தன்னுடைய அரண்மனைக்கு இவர்களை இட்டுக்கொண்டுபோய் வராஹன் வசம் விடுத்து, இவர்களை உபசரித்துப் பாதுகாத்து வரும்படி அவனுக்குக் கட்டளை இட்டான். சிலநாள் இவ்விதங்கழிய, மிஹிர் என்பவன் தன்னுடைய குமாரனேயன்றி வேறல்லனென்று வராஹன் தெரிந்துகொண்ட போது அவன் தன் மனைவியுடன் ஆனந்தக் கடலிலாழ்ந்தனன். தங்களுடைய மருமகளும் அழகிலும் ஜோதிடசாஸ்திர ஞானத்திலும் சிறப்புற்றிருந்ததைக்காண அவர்களுடைய களிப்புக் கரையில தாயிற்று. இவ்வாறு இந்நால்வரும் ஒருவருடம் சுகித்து வாழ்ந்து வருநாள் விக்ரமாதித்ய மகாராஜன் தனது அரண்மனைப் பண்டிதர்களில் ஒருவனுகிய வராஹனையழைத்து "நட்சத்திரங்களின் மொத்தத்தொகை எவ்வளவு? உம்மால் சொல்ல இயலுமா?" என வினவினன். இது ஆகாதகாரியமெனத் தனக்குத்தெரிந்தும், இதுகாறும் தான் பெற்ற கீர்த்தி நிலைகுலைபாதிருக்கவேண்டு மென்னும் அவாவினுல் ஒருநாள் காலம்வேண்டியதென அரசனிடம் பகர்ந்து தன் வீடுவந்து சேர்ந்தனன். அரசனை எப்படித் திருப்தி செய்யப்போகிறோம் என்னும் சிந்தாகுலனுகி முகம்வாடித் துக்கசாகரத்தில் ஆழ்ந்திருந்ததைத் தனது மருமகளாகிய கனு என்பவள் கண்டு மாமனுர் அருகிற்சென்று துக்ககாரணத்தைத் தெரிந்துகொண்டு "மாமா! நீர் இதுபற்றி கவலைப்பட வேண்டாம்; நான் கணித்துக் கண்டுபிடிக்கிறேன்" என்று உரைத்தனள். அப்படியே கணித்துச் சொல்ல அதை வராஹன் (Varaha) மறுநாள் இராஜனிடம்போய்ப் பகர்ந்தனன். அரசன் அதிக ஆச்சரியமடைந்து, இதை எப்படிக் கண்டு பிடித்தாய் என்று வற்புறுத்திக்கேட்க வராஹன் (Varaha) நடந்த விர்த்தாந்தத்தைப் புகன்றனன். அரசன் வியப்பின் உவகையால் "இன்று முதல் கனு (Khana) என்னும் மாது எனது இராஜசபையின் பத்தாவதுஇரத்னகரமாய் இருக்கக்கடவளென்று கட்டளை இட்டனள். இதைக் கேட்ட வராஹன் இடியால் அடி

பட்டவன்போல் ஏங்கி நின்றுவிட்டனன். அவன் யாது செய்வான்.? கனு என்பவள் ஸ்திரீயாயிற்றே! மேலும் விவாகமான மாதாயிற்றே? இராஜ சபைக்கு எப்படிக் கொண்டுபோகப்படலாம்? ஜாதியில் நின்று நீக்கிவிடுவார்களே; நாம் பிரஷ்டர்களாக ஆய்விடுவோமே; இவ்வித நிந்தனைக்கும் இகழ்ச்சிக்கும் ஆளாவதைவிட, தனது குடும்பத்துக்குக் கேட்டை விளைவித்த கனுவினுடைய நாக்கை அறுத்துப்போடுவதே நலமெனத் தீர்மானித்துத் தன்னில்லமேகித் தனது குமாரனாகிய மிஹிரை அழைத்துக் கனுவினுடைய நாக்கை அறுத்துவிடும்படி கட்டளையிட்டான். இவ்விதம் சம்பவிக்குமென ஜோதிட ஞானத்தால் முன்னமே கனுவுக்கும் தன் கணவனுக்கும் தெரிந்திருந்தபடியால், கனு என்னும் வித்வத்சிரோமணி யாது செய்தனளெனின், கணவன் கத்திகொண்டு நாக்கையறுக்க அருகில் வந்தவுடனே முகமலர்ச்சியுடன் தனது வாயை அகலமாய்த் திறந்தனள். மிஹிர் கத்தியால் நாக்கையறுத்துவிட்டனன். கனு என்னும் மாது சிறிதும் வருத்தமின்றிப் பேருவகையுடன் உடலைத் துறந்து உம்பருலகம் புக்கனள்.

ஆரியர்கள் பஞ்சாப் என்னும் தேசத்தில் குடி பேறியிருந்த காலத்தும் பின் அதனைத்தாண்டி ஹிந்துஸ்தானமென்று வழங்கி வரும் பாதவர்ஷத்தைக் கைப்பற்றி அதில் வாழ்ந்துவந்தகாலத்தும் மேற்கண்ட வித்வத் மாதுசிரோமணிகள் விளங்கிவந்தனரென்பது வேதசாஸ்திர ஆராய்ச்சி செய்துவரும் பண்டிதர்களின் துணிபாகும். ஆரியர்கள் இப்பரத கண்டத்தில் வெகுகாலம் சுகமாக வாழ்ந்துவந்தார்கள். பிறகு அன்னிய ஜாதியர் இந்தியா தேசத்தின் மீது படையெடுக்கத் தலைப்பட்டனர். அப்பொழுது இந்தியாதேசமானது அல்லோகலப்பட்டது. கோயில்களும் விக்ரகங்களும் தகர்க்கப்பட்டன. ஸ்திரீகளின் பதிவிரதாத்தன்மைக்குப் பழுதுநேரிடத் தலைப்பட்டது. இவ்வித ஆபத்காலத்தில் ஹிந்து ஸ்திரீகள் காட்டிய குணாதிசயங்களையும் வீரத்தன்மையையும் தக்கவாறு வர்ணிக்க, தமிழ்பாஷையில் போந்த மொழிகளில்லையென்று சுதேச நேசர்கள் வருந்துகின்றனரென்றால், அம்மாதுசிரோமணிகளின் குன்றாப்புகழ் சாமானியரால் நவிலற்பாலதோ! ஆயினும், நமது சகோதரிகளின் நன்மையைக் கருதி இத்தகைய கீர்த்தியை நிலைநாட்டிய சில மங்கையர்களின் வீரச்செய்கைகளைக் கூடியமட்டும் சுருக்கமாக இனி உரைக்கப் புகுவாம். (வரும்).

P. Manickasamy Mudaliar, B. A.

நாலடியார்.

கடவுள் வாழ்த்து.

(முன் தொடர்ச்சி)

இவனது மாதுலன் காசி க்ஷேத்திரம் போகக்கருதித் தனது தமக்கையிடம் விடைபெற்றுப் போமாறு வரவும், அப்போது சந்திர சேகரனது தாய்தந்தையர்கண்டு சொல்லுகிறார்:—உனது மருமானுக்கு வயது பதினாறு நெருங்கியது. இனி இவன் இறப்பது நிச்சயம்; நாங்கள் அவனைத் துறந்திருப்பது எங்ஙனம்? இவனிங்கு உயிர்விடுவனேல் நாங்களும் உயிரைவிடுவது உண்மையே. ஆகையால் நீ யுன் பின்னோடு கூட்டிச்சென்றால் அவ்விடம் உயிர் துறப்பானாகில் அவனுக்குப் புண்ணிய முண்டாகுமே யென்று சொல்லவும் அவனருளால் சந்திரசேகரனைக் கூட்டியழைத்தார்கள். சந்திரசேகரனும் தனது மாமனுமா யிருவரும் ஒன்றிலும் நிகரில்லா நகரைக்கடந்து, காட்டைக்கலைத்து வேட்டைகளாடி, கண்ட விலங்கினைத் துண்டுகள்செய்து, மலையைச் சிதறச் சிலையை வளைத்துப் பாணங்களை யெய்துகொண்டே மண்டோதரனின் ஆளுகைக்குட்பட்ட காசிதேசமடைந்து ஒரு பூஞ்சோலையில் சயனித்துக் களைப்புத்தீர இளைப்பாறினார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் மண்டோதரன் மகள் சேடியரோடு அப்பூஞ்சோலைக்கு வந்து மலர்கள் கொய்தாள்; தனக்கெதிரில் சயனித்திருக்குமிருவரில் சந்திரசேகரன். மேல் தன்னிருகண்ணையு மமைத்து, ஹா ! ஹா !! எதிரில் சயனித்திருப்பவர் தேவரோ, கானிலந்தோயாக்கடவுளோ? அல்லது அழகில் அழகனுக்கு நிகராகச் சொல்வது இவரல்லாமல் மற்றவர் பொருந்தாராகையால், இனி நாம் மணக்கினும் இம்மணவாளனையன்றோ மணம்புரியவேண்டும் என்றாள். "பண்டுவினையிருக்கிலோ கொண்டது கைகூடும்"? முடவன் கொம்புத்தேனுக்கிச்சை வைத்ததுபோலானது நமதெண்ணம் என்று அலைவாய்த் துரும்புபோல் பலவாறு கிடந்துழலும் மனமுடையவளாய் மலர்கள் கொய்யத்தொடங்கினாள். இக்கணத்தில் சேடியருள் ஒருத்தி அக்கன்னியருகடைந்து கைம்பெண்ணுக்கருதுங் கன்னியே! நான் பறித்தமலரை நீ யெடுத்துவந்ததென்னவென்று வினவலும், அடி, சாதியிலுங் கீழ் ஜாதியானவளே! இன்று "மங்கள கௌரி"யின் விரதமென்றல்லவா? சோலையிற் புகுந்து மாலைகள் கட்ட மலர்கள் கொய்யவந்தோம்; அதனை உணராது என்னை இவ்வித உதாசினவார்த்தைகள் பேசியவுன் நாவை

அறுக்கிலென்? கொஞ்சமேனும் அஞ்சாது சொன்ன நெஞ்சைப்
பிளக்கிலேன்? இவ்வாறாக மற்றுஞ் சிலவற்றையுங் கூறிச் சேடிய
ரோடு மீண்டு தன்னரண்மனை வாயில் வந்தடைந்தாள். கண்ணுங்
காதலுங் கன்னிமேல்வைத்த சந்திரசேகரன் சொல்லுகிறான்:
இப்பெண் யாவளோ இவளை மணம் புரிவோமென்றால் எத்தனை
கோடி தவத்தைச் செய்யினும் கிடைப்பதவஸ்தையே யென நெ
ஞ்சுறத்தேர்ந்து, தனது மாமனைக் கூட்டிக்கொண்டு அவ்வூர்ச் சத்
திரத்துப் புறந்திண்ணையில் இருவரும் சயனிப்பாராயினர். காசி
தேசாதிபதியாகிய மண்டோதரன் தன் மகளை மந்திரிகுமாரனுக்
குக் கொடுப்பதாக எற்கெனவே நிச்சயித்திருந்தான். அதற்கவள்
வனப்பில்லா வானரமென்று, ஒவ்வாததை யறிந்த மந்
திரி அன்றே வதுவையை நிச்சயித்து ரூபலாவண்யமுள்ள
ஒரு புருடனை நிறுத்தித் திருமணஞ் சூட்டுவித்துப் பிறகு நம்
புதல்வனே மணமுடித்தானென உறுதி கூறுவதாய்த் தீர்மா
னஞ் செய்துகொண்டு, ஒரு சுந்தரபுருடனுக்காக அவ்வூர் முழு
துந் தேடியுங்காணாமல், சத்திரத்தில் நித்திரை செய்யும் சந்திர
சேகரனைக் கண்டு இவனே பொருந்துவானென மனதிலோர்ந்து,
மாதுலனிடம் சில திரவியங்கொடுத்து இன்றிராப்பொழுதுக்கு
மட்டும் இப்பையனை அனுப்பிவைக்கவேண்டுமென்று கேட்க,
அவன் அதற்கிசையவும், சந்திரசேகரனைக் கூட்டிக்கொண்டு மந்திரி
தன்னரண்மனை வந்தடைந்தான். சந்திரசேகரனைத் தன் மகனாக
மாறுபடக்காட்டி மண்டோதரன் மகளை மணம்புரியுமாறு செய்ய,
அவ்வேந்தன் அதற்குடன்பட்டுத் தன்மகளைச் சந்திரசேகரனுக்கு
மணஞ் செய்வித்தான். வதுவை முடிந்ததும் சந்திரசேகரன் அவ்
வரண்மனையிலேயே நித்திரை செய்யுமளவில், இவனாயுள் அன்
றோடு முடிவானதால், ஒரு நாகமானது தீண்டுதற்குச் சீறிவருத
லைக்கேட்ட மண்டோதரனது மகள் திடுக்குற்றெழுந்து, அதன்
பின் தொடர்ந்து சென்று நாகமெனக்கண்டு கௌரி நோன்
பிற்காகச் செய்துவைத்திருந்த அக்ஷதையை அந்நாகத்தின் தலை
யில் படும்படி தூவினாள். அக்ஷதைபட்டவிடத்திலேயே அது விட்
டதுயிரை. அதைமீறி அப்புறந்தேடிப்பார்க்க, தன்னை மணந்த
மணவாளன் நித்திரை செய்வதைக் கண்ணுற்றுச் சோலையிற் புக்கு
மலர்கொய்யும்போது தாதியுரைத்த சொல்லு இதற்கென்றே யெண்
ணித் தனது படுக்கையறையிற்போய்ச் சேர்ந்தாள். அதிகாலையில்

சந்திரசேகரனெழுந்து தனது மாதுலனிருக்குஞ் சத்திரம்போய்ச் சேர்ந்தான். இருவரும் புறப்பட்டுக்காசி க்ஷேத்திரம் சென்றார்கள்.

மறுநாள் மண்டோதரன் தன் மகளுக்கு நிஷேகஞ் செய்வதாய்த் தீர்மானித்துச் சப்ரமஞ்ச கூடத்திற்கு மந்திரி குமாரனை யழைக்க, மண்டோதரன் மகள் இவனைப்பார்த்து "இரவு மணந்த மணவாளன் இவனோ? அல்லவே? இது ஏதோ ஒரு சூதாய்த் தோன்றுகிறது என்று மனக்கிலேசமுற்று, பின்பு அவனைப் பார்த்துச் சொல்லுகிறாள். அடே! மூடா! எட்டேகால்லக்ஷணம் பொருந்திய மட்டியே! என்னை மணந்த மணவாளன் நீயோ? உன் தந்தையாகிய மந்திரி கற்பித்த தந்திரமோ? சீ! எட்டி அப்பாலேபோடாவென்று ஏசி, பலவாறாகப்பேசி வெளிக்கிறக்கிவிட்டுத் தன்னரண்மனை வாயிலைத் திருக்காப்பிட்டுக்கொண்டாள். மறுநாள் காலையில் இவ்விடம் நிகழ்ந்தனவெலாம் அறிந்த மண்டோதரன் தன் மகளருகடைந்து கேட்பதற்கொருவழியுங் கண்டறியாது சுவரிலெழுதிய உருவம்போல் நின்றான்; இவரது குறிப்பையறிந்த புதல்வி சொல்லுகிறாள்:—

அன்பு நிறைந்த தந்தையே! இரவு நிஷேதமெனத் தெரிவித்து மாலையிட்ட மணவாளனல்லாது மந்திரிகுமாரனைப் பஞ்சணைக்கழைத்தது வஞ்சனையென்று சற்றும்அறிந்திலீர் போலும்! அதனை ஆலோசிக்காது கோபக் குறிப்போடு பார்ப்பது தக்கதன்று. ஒருவன் நாணிட மற்றொருவனுக்கு முன்றானையிடுவதால் கற்புக்கீனம் வருமென்பதறியாத உமது பேறறிவுக் கென்னென்று சொல்வது? இவ்விதமோ உமதன்னையும் எனதன்னையும் ஈன்றனளென்று சொல்லிக் கண்ணீரைத் தாரைதாரையாக வடித்தாள். இவை யெல்லாங்கேட்டு நிற்கும் மண்டோதரன் உள்ளதறியா வள்ளலாகையால், மனம்பதறிச் சொல்வான்:—என தருமை மகளே! மந்திரியின் கள்ளமென்று உள்ளத்திற் சற்றும் எண்ணவில்லையே! யானினிச் செய்யவேண்டியது யாது? கூறவாது சொல்வையேல் அதற்குத்தக்கவாறு செய்வேன் என்றான். அதற்கப்பெண் மாலையிட்ட மணவாளனைக் காண்பதென்றால், அரிதாகும். அதற்குநான் ஆறுமாதம் நோன்பிருந்து ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் நானே அன்னமிடும்படி ஒரு சத்திரங்கட்டித் தரவேண்டுமென்று கோரிக் கொண்டாள். மண்டோதரன் அவ்வாறு செய்ய, அவள்விரதத்தை மேன்மேலும் செய்துகொண்டுவருவாளாயினள்.

இது நிகழ்ந்த சில நாள்வரை மணவாளனைக் காணாது வருத்தமுற்றுப்பலவாற்றானுஞ்சகிக்காதவளாய்த்துக்கசாகரத்தில்மூழ்கினள்.

விரதம் அந்தியமாகும் நாளில் காசிக்ஷேத்திர மடைந்த சந்திரசேகரனும் அவனது மாதுலனும் திரும்பிவரும் வழியில் இச்சத்திரத்தைக் கண்டு இதில் இன்று நின்று இளைப்பாறிப் போகலாமென்று இருவரும் அவ்விடந் தங்கினர்கள். அச்சமயம் சத்திரத்தில்அமுதளிக்கும் காலமானதால், இருவரையு மழைத்து அமுதளித்தனர். மண்டோதரன் மகள் யாவருக்கும் அமுதை விளம்பிவருமளவில்"சந்திரசேகரனைக் கண்ணுற்று, இவரே தனது நணவரென்று நிர்ணயங்கொண்டு கையைப்பிடித் தழைத்துத் தனது தந்தையிடம் கொண்டுபோய் ஒப்புவித்தாள். பிறகு மண்டோதரன் இவன் தந்தையரை தூதரால் வரவழைத்துச் சந்திரசேகரனுக்கும் தன் மகளுக்கும் கடியுந் திருமுடியுஞ் சூட்டினன். அவர்கள் சுகமேவாழ்ந்தார்கள். பின் இம்மங்கள கௌரியின் நோன்பை அனுஷ்டித்ததனல், அமங்கல்ய மாவதொழிந்து சுமங்கல்யம் பெற்றதும் காணுத கணவனைக் கண்டதும் பசுமரத்தாணிபோல் பதியப்பெற்று ஒருவனைப் பற்றி ஓரகத்திருத்திலே உத்தமமென்று கடைப்பிடித்துச் சுகமேவாழ்ந்தனள்.

வீ. ஆ. துப்புவேல், எடமன்.

இந்திரன் பன்றியான கதை.

இந்திரன் முன்பொருகாலத்தில் ஒரு மகரிஷியின் சாபத்தால் பன்றியாயினன். அச்சாபம் அப்பன்றிவடிவத்தைக் கொன்றால் நீங்கிப்போமென்று அந்த மகரிஷி இந்திரன் பிரார்த்தனைக்கிரங்கி வரங்கொடுத்திருந்தார். இந்திரன் அச்சாபத்தின்படியே ஆண்பன்றியாகி ஒருபெண்பன்றியுடனேகூடிப் பலகுட்டிகளையீன்று,அவற்றோடுமலத்தைத்தின்று சுகமாகக் காலங்கழித்துவந்தான். தேவர்கள் தமதரசனகிய இந்திரனது நிலைமையைக் கண்டு வருத்தமுற்று, அவனருகே வந்து, ஓ பன்றியே! நீ உன்னை மறந்திருக்கின்றாய்; நீ யெங்களுக்கு அரசனான இந்திரனவை; இவ்வடிவத்திலிருந்து வெளியேவாக் கடவாயென்று கூறினர். இந்திரன் அதனைக் கேட்டு, தனது பூர்வநிலையின் ஞாபகம்வந்தும், தன்னோடுள்ள பெண்பன்றி முதலியவற்றின்மீ துள்ள மோகத்தால் இந்

நிலைமையில் நான் சிறிது காலமிருக்க வேண்டும்; எனக்கிப்போது சுவர்க்கம் வேண்டாம்; பிறகு பார்த்துக் கொள்ளலா மென்று கூறினன்.

இந்திரன் அவ்வாறு கூறியதைத் தேவர்கள் கேட்டு வியப்புற்று, நமது அரசன் சார்ந்ததன் வண்ணமா யிருக்கின்றான்; தன்னிலைமையைக் கவனியா திருக்கின்றானென் றுணர்ந்து, பன்றி வடிவங் கொண்டிருக்கும் இந்திரனோடுள்ள பன்றிகளை ஒவ்வொன்றாகக் கொன்றனர்; அப்படி கொன்றும் அவனுக்கு அப்பன்றி வடிவத்தின்மீதுள்ள ஆசையொழியவில்லை; அப்பால் அவர்கள் அவன் மிகு பிரியங்கொண்டுள்ள பெண்பன்றியைக் கொன்றனர். அதுகண்டு அவன் மிகத்துன்ப முற்றழுது தப்பித்துக் கொண்டோட முயன்றான். உடனே தேவர்கள் அப்பன்றி வடிவத்தை ஆயுதத்தால் வெட்டிப்பிளந்தனர். அவன் அப்பன்றிவடிவத்தினின்றும் தன் சொந்தவடிவந்துடன் வெளியேவந்து, யான் சொப்பனங்கண்டேனென்று சிரித்துக்கொண்டே கூறித் தன்னுலகத்திற்குச் சென்றனன். இக்கதையால் உயிர் சார்ந்ததன் வண்ணமாயிருந்து தன்னை மறந்துவிடுகின்றதென்பது நன்குவிளங்கும்.

விநோத சம்பாஷணை.

வித்துவானும் குழித்தலையும்.

ஒரு வித்துவான் குழித்தலை யென்னு மூரில் வசிக்கும் ஒரு பிரபுவைக் காணுமாறு, அவர் வீட்டிற்குச் சென்றார். அப்போது அந்தப் பிரபு புழைக்கடையிலிருந்தார். வித்துவான் தாம் வந்திருப்பதைப் பிரபுவிற்குத் தெரிவிக்குமாறு அங்குள்ள ஒருவேலைக்காரனிடத்திற் கூறினர். அவன் சென்று பிரபுவினிடத்தில் வித்துவான் வந்திருப்பதைத் தெரிவித்தான். சமயோசிதமாய்ப் பேசும் அந்தப் பிரபு வந்து, அவரை நோக்கி வித்துவானென்பதை இராப்பகல் என்பதுபோல உம்மைத்தொகையாகக்கொண்டு, வித்தும் (விதையும்) வானும் (மழையும்), உடையவர்க்கு நம்மிடத்துப் பெறக்கூடியது ஒன்றுமின்றே யென்று கூறினர். அதற்கு வித்துவான் குழித்தலை யென்பதை உம்மைத் தொகையாகக் கொண்டு, குழியும் (குளம் அல்லது ஏரியும்), தலையும் (விளைநிலத்திற்கிடும் வரப்பும்) இல்லாவிடத்து, வித்தும் வானும் பயன்படாவன்றோ? அதுபற்றி வந்தேனென்று சமயோசிதமாய்க் கூறினர். அது கேட்டுப் பிரபு அவர் கல்வியறிவிற்கு வியந்து, அவர்க்கு அவர் வேண்டியவற்றைக்கொடுத்தார்.

விதையும் மழையு மிருந்தாலும், குழியும் தலையுமில்லாவிடத்து, அவை யுழவர்க்குப் பயன்படுவ தாகாவென்பது அவ்விருவிடையின் திரண்டபொருளாம்.

புலவரும் கனவானும்.

ஒரு புலவர் காரைக்காலில் வசிக்கும் ஒருகனவானைக் காணச் சென்று, அவர் வீட்டிலுள்ள வேலைக்காரர் வாயிலாகத் தாம் வந்திருப்பதை அக்கனவானுக்குத் தெரிவித்தார். அக்கனவான்வந்து, அவரை நோக்கி, (புலவர் என்பதை வயலுடையவரென்னும் பொருளில்) புலவர்க்கு (வயலுடையவர்க்கு) கனவான்தயவு வேண்டியதில்லையே யென்று கூறினர். அதற்குப் புலவர் (கனவான் என்பதைப் பெருமழை யென்னும் பொருளில்) புலவர்க்குக் கனவான் (பெருமழை) இல்லாவிடத்து, அவர் பிழைப்பதெப்படியாம்; அதுபற்றி வந்தேனென்று சாமர்த்தியமாகவிடைகூறினர். அவர்கூறியதைக் கேட்ட பிரபு அவர் கல்வியறிவிற்கு மெச்சி அவர்க்கு அவர் விருப்பியவற்றைக் கொடுத்தார். (புலம்-வயல்; வான்-மழை).

இவ்வினுவிடையின் திரண்டபொருள் புலவர்க்குக் கனவானில்லாவிடத்து, அவர் பிழைப்பது முடியாதென்பதாம்.

நூல் ஆராய்தலும் இரும்படித்தலும்.

காஞ்சிபுரத்தில் கருமானொருவனும் கைக்கோளனொருவனும் நிரம்பிய கல்வியறிவுடையவரா யிருந்தனர். இவ்விருவரும் தம்முள் கல்வி விஷயத்தில் பகைகொண்டிருந்தனர்.

ஒருநாள் அக்கருமான் அக்கைக்கோளன் வீட்டிற்கருகே செல்லும்போது, அவன் தனது பக்கத்தில் கந்தபுராணத்தை விரித்துவைத்துப் பார்த்துக்கொண்டே, நெய்வதற்குரிய நூலையெடுத்துக்கொண்டிருந்தான். அதுகண்டு கருமான் அவனை யிகழ்ந்து பேசவேண்டுமென்னுங் கருத்தோடு, அவனை நோக்கி நூல் ஆய்கின்றீரோவென்று கூறினன். அதுகேட்டுக் கைக்கோளன் ஆம்; இரும்படியும் என்று கூறினன்.

நூல் ஆய்கின்றீரோ என்பது நெய்வதற்குரிய நூலை யாராய்ந்தெடுக்கின்றீரோ, சாஸ்திர ஆராய்ச்சிசெய்கின்றீரோ என்றிரு பொருளுடையதாம்; இரும்படியும் என்பதோ இரும்பு அடியும், இரும், படியும் என்றிருபொருளுடையதாம்.

குசேலோபாக்கியானம்.

(முன் தொடர்ச்சி).

(தீமையைத்தருவதன்றி) நன்மையைத் தருவதில்லாத உடம்பிணைப் பாதுகாப்பது நற்குணங்களை யுடையவரது செயலன்று; பன்றிகள் மலக்குழியில் அழுந்தி, அதனைப் பெருஞ்சுகமென்று கருதியிருப்பதுபோலயான் இக்குடும்பச் சேற்றிலழுந்தி அதனைச் சுகமென்று கருதிக்கலங்கமாட்டேன்; கலங்கமாட்டேனென்று கூறிமுடித்தனர் குசேல மாமுனிவர்.

சுசீலையம்மையார் குசேலர் கூறியவனைத்தையுங் கேட்டு, இவர் கூறியவனைத்தும் உண்மையே யென்றறிந்தும், தம் புதல்வர்மீது வைத்துள்ள ஆசையாகிய மயக்கம் ஒழியாது, பின்னும் அவர் பாதங்களை வணங்கிச்சாஸ்திரங்களனைத்தையும் ஓதிக்குற்றங்களனைத்தையு மொழித்த தூயவரே! இவ்வுலகத்தில் முயற்சி செய்யாதவனுக்குச் செல்வ மெவ்வாறு கிடைக்கும்? விளைநிலத்தையுழுது விதையினை விதையாதவனுக்கு விளைவின் பயன் கிடைக்குமோ? (கிடைக்காதென்பது நிச்சயமன்றோ?) ஒருவன் தனக்குச் செல்வங் கிடைக்கவேண்டுமென்று இடைவிடாது முயற்சி செய்வானாயின், அவனுக்குத் தெய்வமும் அச்செல்வத்தைக்கொடுக்கும்? அதனாலல்லவா? தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் "முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை, யின்மை புகுத்தி விடும்" என்றருளிச் செய்தனர்.

சக்கிரம், தனு, வாள், தண்டு, சங்கு என்னும் பஞ்சாயுதங்களையுமுடைய பகவான் மக்கள், தேவர் நரகரென்னு முயர்திணையுயிர்க்கும் ஒன்றன்பால் பலவின்பாலென்னு மஃறிணையுயிர்க்கும் வேண்டியவனைத்தையுந் தந்தருள்வானென்று திருவாய் மலர்ந்தீர்கள். அப்பகவான் முயற்சி பல செய்யாதவர்க்கு அவற்றை யெவ்வாறு கொடுத்தருளுவன்? திருமாலின் திருவடிகளைத் தியானித்தலே கடைத்தேறு மார்க்கமாமென்றறிந்து, அவற்றைத் தியானிக்கும் மாதவத்தை யுடையவரே? அறிவுடையோர் ஒருவன் செய்யவேண்டிய முயற்சிகளைச் செய்வானாயின், அவனுக்குவேண்டியவற்றை இலக்குமி மணாளன் திருவுளமிரங்கித் தருகின்றான; செய்யவேண்டிய முயற்சிகளைச் செய்யாதவனுக்கு அவற்றைத் தாரானென்று கூறுகின்றனர். மறைமுழுதுமுணர்ந்துதவமுழுதுஞ்

செய்த தபோதனரே! முற்பிறப்பில் நல்வினைகளைச் செய்தவர் இப்பிறப்பில் முயற்சிசெய்வதின்றி நினைத்தபோகங்களை யெல்லா மனுபவிப்பரென்று கூறுவீராயின், ஒருவர் அரிசி, நீர், நெருப்பு, அடுப்பு, விறகு முதலிய உபகரணங்க ளெல்லாவற்றையு முடைய வரா யிருப்பினும், சமைத்தற்குரிய பொருள்களைச் சமைத்த லென்னு முயற்சி செய்யாவிடின், அவன் அவை பசியைத் தணித்துக்கொள்ளுதற் குரிய உணவாகுமோ? மெய்த்தவத் தாற் சிறந்தமேலோரே! ஒருவன் "நமக்குக் கடவுள் வேண்டியவற்றைக் கொடுப்பார்" நினைத்து, செய்யவேண்டிய முயற்சியைச் செய்யாதிருப்பானாயின், அவன் பெருஞ்செல்வத் தை யடைவதற்குரியவனாவனோ? உண்கலத்திலுள்ள பாற்சோற் றை யெடுத்துண்ணாவிடின், அவன் பசியாறுமோ? எடுத்துண்டா லன்றோ பசியாறும். முற்காலத்தில் முதலைவாயி லகப்பட்டு வருந் திய யானையும், இரணியன் செய்யும் இம்சையைப் பொறுக்க முடி யாது வருந்திய பிரகலாதனனும், அன்போடு துதித்து அழைத்த மையாலன்றோ, அந்த யானையையும் பிரகலாதனையும் கருங் கடல்வண்ணனாகிய திருமால் வந்தாண்டருளினான். இதனால் முய ற்சி செய்பவர்க்கு அடைதற்கரிய பொருள் ஒன்றுமின்றென்று விளங்குகின்றதல்லவா? வேத நான்கையும் அங்கமாறையும் நன் காராய்ந்தறிந்தவர்களுள் சிறந்த வேதியரே! பிரமனைப்பெற்ற பெருமானாகிய கமலக்கண்ணன், காமம் வெகுளி மயக்க மென்னு முக்குற்றங்களையுமொழித்துள்ள முனிவர்கள்வேண்டிப் பிரார்த்தனை செய்யாவிட்டால் அவர்கட்கு முத்தியைக்கொடுப்ப னோ? அக்கமலக்கண்ணன், நீர் செல்வத்தை விரும்புவீராயின், உமக்கு விரும்பியவாறே அச்செல்வத்தைக்கொடுத்தருளுவன். பிர மனை யொத்த பெருந்தவமுனிவரே! முற்காலத்தில் அளவிறந்த முனிவர்கள் முகுந்தனை நோக்கிப்பெருந்தவஞ் செய்து, அவனிட த்துச் சொல்லுதற்கரிய செல்வங்களைப் பெற்றிருக்கின்றனர். அத் தன்மையதாகிய செல்வத்தைத் திருமால் தரப்பெறுவது புகழ் தருவதாகுமே யன்றி யிகழ்தருவதாகாது. அத்திருமாலினது திரு வடிகளையன்றி மற்றொன்று ஆதரவாவதில்லை யென்றறிந்துணர் ந்த அந்தணரே! தேவரீர் ஆசை, பொய், கோபமென்பவற்றை யொழித்திருக்கின்றீர்; அவ்வாறிருப்பினும், அத்திருமால் கிருஷ் ணவதாரங்கொண்டெழுந்தருளி யிருக்கின்ற துவாரகையை யடை ந்து, அக்கிருஷ்ண மூர்த்தியை நோக்கி, எனக்குப் பொருள் தர வேண்டுமென்று யாசிப்பது இழிவாகுமோ? (இழிவாகாது; இழி

வாகாது). மங்கையர் தமக்கு அவர் தம் மணாளரே தெய்வமாவ ரென்று வேதம் நான்கும் விளம்புகின்றன; அதனால், தேவரீர் எனக்குத் தெய்வமாக விருக்கின்றீர். ஏழையாகிய என்னைக் காப்பாற்றுதல் தேவரீரது கடமையாகும். வாசுதேவன்றன் மலரடி களை மனத்துட்கொண்டு மறவாது துதிக்கும் மறையவரே! அறியாமையுள்ள வெனக்குத் தெய்வமும் தேவரீரே நாயகரும் தேவரீரே; தேவரீர்க்குப் பணிவிடைசெய்வதே எனக்குத்தானம் தவ முதலிய புண்ணியகருமங்களாம். சுவர்க்க மத்திய பாதாள மென்னு மூன்றுலகத்திலுமுள்ள உயிர்களனைத்தையும் இரட்சிப் பவன் திருமகள் கொழுநனேயாவன்; ஆயினும், உம்முடைய மக் களையும் என்னையும் பழைமையாகிய வேதசாஸ்திரங்கள்கூறுவதற் குப்பொருந்த இரட்சித்தல் தேவரீரது கடமையாகுமென்று கூறி முடித்தனர்.

செல்வமில்லாமைபற்றி முகம்வாடி யிரக்கமாகக் கூறியசுசீலை யின் சொற்களைக் குசேலர்மறுத்துக்கூறாது, துவாரகைக்குப் போக உடன் பட்டார்.

குசேல முனிவர் கிருஷ்ணபகவானைச் சென்று தரிசித்தால் மேன்மையும் மோக்ஷமும் உண்டாகும்; தம்மக்கள் காரணமாக மனம் வருந்துகின்ற இவளது எண்ணமும் நிறைவேறும் எனச் சிலநேரம் ஆலோசித்து, தம்மனையவளது முகத்தை நோக்கிச் சுசீ லாய்! தெய்வம், குரு, அரசனென்னுமிவர்களது சந்நிதானத்திற் செல்லுவோர் அவர்களது அருள்பெறவேண்டின் அவர்கள் விரும் புவனவற்றுள் ஏதேனுமொன்றைக் காணிக்கை யாகக்கொண்டு சென்று அவரைத்தரிசிப்பர். தெய்வமும், குருவும், அரசனுமாகிய கண்ணன் சந்நிதானத்திற்கு யான் எதனைக் காணிக்கையாகக் கொண்டு செல்லுவேன்?

நறுமலர் செறிகுழல் நங்காய்! தரித்திரர் யாதாவதொன் றைப்பெற வேண்டிச் செல்வரிடத்துச்செல்லுவாராயின், செல்வர் தரித்திரரை மதியாதிருப்பதோடு, இழிமொழிகளையுங்கூறிஅவமா னஞ் செய்வர். அத்தரித்திரர் மானமுடையோராயின், அவ்வவ மானத்தால் சாதலில் தலைப்பட்டு நிற்பர்; ஆகையால் செல்வரிட த்துத் தரித்திரர் போதல் நன்மையைத் தருவதென்றெண்ணாதே. "இல்லாரை யெல்லாரும் எள்ளுவர்" என்று திருவள்ளுவர் கூறி யது பொய்யாமோ! அஃது உண்மையா மென்று கருதுவாயாக.

தாய்தந்தையரும் தரித்திரமுடைய தம்மக்களை வெறுப்பாராயின், தரித்திரரை வெறுத்துப் பேசாதவர் யாவர்? தரித்திரர் ஒருபொருளையும் விரும்பாதவரா யிருப்பினும் செல்வரிடத்துச் சென்றால் அச்செல்வர், இவர் ஏன் நம்மிடத்திற்குவந்தது ஏதனைநினைத்தோ வென்று எண்ணி, அவர் வருந்துமாறு பல குறிப்புமொழிகளைப் பேசுவர். ஆதலால் ஆசையோடு செல்வரிடத்துச் சென்ற தரித்திரர்க்கு அவமானம் வருவது நிச்சயமாம். யாது காரணம் பற்றி யிவன் இவ்வாறு கூறுகின்றானென்று நீ நினையாதே. மனிதர்கள் தன்மை இத்தன்மையதென்று கூறினேன். வேத முதல்வனாகிய கண்ணபிரானிடத்துச் செல்வதுதகாதென நான் கூறினேனில்லை.

அப்பகவான் சந்நிதியில் யான் காணிக்கை யில்லாது எவ்வாறுபோவேன். ஒரு புல்நுனியில் தங்கிய பனித்துளி சப்த சமுத்திரங்களுக்கும் சந்தோஷத்தை உண்டாக்குவதெப்படி? மலையளவு சுவாமிக்கு அம்மலை யளவு காணிக்கைகொண்டு வணங்குவது கூடுமோ? மலையளவு சுவாமிக்குக்கடுகளவுகர்ப்பூரமென்பது போல முழுமுதற் கடவுளாகிய கண்ணபிரான் சந்நிதிக்கு ஏதாவதொரு பண்டத்தைக் காணிக்கையாகக்கொண்டு செல்ல வேண்டும் என்று கூறினர்.

பூங்காவனம்.

(முன்தொடர்ச்சி.)

எட்டாம் அதிகாரம்.

அன்று பிற்பகல் சாப்பாட்டு நேரத்தில் உணவருந்துவதற்கு ஜமீன்தார் சிசுபாலன் அருட்பிரகாசம் ஆகிய மூவரும் வந்தபொழுது வழக்கம்போலப் பணியாளர்கள் போசனங் கொடுத்தார்கள். அப்பொழுது பூங்காவனம் அன்போடு அங்கு வந்து பணியாளருக்கு உதவியாக நின்றுபரிமாறினாள். இதைக்கண்ட ஜமீன்தார் சந்தோஷப்பட்டனர். தமது குடும்பப்பெருமை சிறிது காலத்தில் அற்றுப்போமென் றெண்ணினவராய்ப் பூங்காவனமும் அருட்பிரகாசமும் ஐக்கியமாய்வந்து விட்டார்களென்பதைக் காட்டும்படி பக்கத்தேயிருந்த மூத்த குமாரனாகிய சிசுபாலனைப் பார்த்தார். அருட்பிரகாசம் உண்ணும்பொழுது

பெரியதாயார் காட்டிய அன்பைக் கண்டவுடன் அவளைப்பற்றிய கெட்ட எண்ணமெல்லாம் மாறிவிட்டன. ஆனால் அவன், பூங்கா வனம் தன்னை நேசித்துக்கொண்டு மோசஞ் செய்தாலும் அப்படி வேண்டுமென்று செய்தவளல்ல வென்றெண்ணி யிருந்தாலும்தன் னுடைய நடத்தைகளினால் மனம்நோகப் பண்ணாதபடி நடந்து கொண்டான். இப்போது அவன் வெளித்தோற்றத்துக்கு அவளை மரியாதையாகக் கனப்படுத்தி நடத்தினான். சாப்பாடு முடிந்த வுடன் சிசுபாலன் பெரிய தந்தையாரைத் தனிமையிற் சந்தித்து ஐயா! நான் சொன்ன புத்தி நயந்துவிட்டது. எசமானி சற்றே அடங்காதவளாயிருந்தாலும், அருட்பிரகாசத்தின் மனவிசாரம் படிப்படியாகக் குறைந்துவருகின்றது; அதைத்தாங்கள் கவனி க்கவில்லையா? என்றான். அவர் சந்தோஷப்பட்டுக்கொண்டார். அவன்மற்றை நாட்குதிரைச்சவாரிக்குஒருவிதமானமாறுபாடுமின் றிச் சந்தோஷமாகச்சென்றான். அவனுக்கு அன்று கடிதம்எழுத வேண்டிய அவசியம் வரவுமில்லை; வேறு சரீர அப்பியாசஞ்செய் யும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கவுமில்லை. வீட்டிலிருக்கும்படி சொற்பவருத்தம் இருந்திருக்கவில்லை. அன்று சாயந்தரம் எல்லோரும் மண்டபத்தி லிருக்கும்பொழுது மூத்தமகன் வந்து சிறிதுநேரம் அங்கும் இங்கும் உலாவியபின் பூங்காவனத் தின் பக்கத்திலிருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்தான். அதற்கு முன் அரைமணித்தியாலமாக அருட்பிரகாசம் அவளுடன் சம்பா ஷித்துக்கொண்டிருந்தவன் எழுந்து இன்னும் அங்குள்ள மற்ற வர்களுடன் சம்பாஷிக்கும்படி சென்றான். அப்பொழுது சிசுபா லன் பூங்காவனத்தைப்பார்த்து, நாங்கள் மூன்று வருஷகாலமாக ஒருவரையொருவர் பிரிந்திருந்து, அன்று முதல் என் சகோதர னைக் கண்டவுடன் எவ்வளவாய்மனமுருகினேனென்பது தங்களுக் குத் தெரியாதென்றும், அவனால் தான் பெருமையடையக்கூடிய ஒரு தம்பியென்றும், தான் கண்டவாலிபர்களுக்குள் இவனே மிக அழகுள்ளவன்; அவனுடைய முகத்திற் குதிகொள்ளும் புத்தி யின் வெளிச்சத்துக்கு மற்றவைகளொன்றும் நிகரல்லவென்றும் சொல்லி, ஆனால் அவன் சந்தோஷமில்லாதிருக்கின்றான் என்றும் கூறினன். இவன் இவ்விதமாகக் கூறியபொழுது நிச்சயமாய்ப் பூங்காவனம் பயந்து வெளியிற் தோற்றாதபடி உள் நடுக்கமாயிரு ந்தாள். சிசுபாலன் சிறிது தூரத்தில் நின்ற அருட்பிரகாசத்தைத் தன் அன்பான பார்வையாற் பார்த்துக்கொண் டிருக்கும்பொ

ழுது அருட்பிரகாசம் அவனது முகத்தோற்றத்தை ஆராய்ந்த வரையில் அவனது குறிப்புக் கவனிக்கக் கூடியதாயில்லையென்றும், சம்பாஷணை தற்செயலாய் அவன்வாயில் வந்ததென்றும் எண்ணினான். ஆம், நான் நினைக்கிறவரையில் அருட்பிரகாசம் உலகத்திற் கீர்த்திமானாக வருவான்போலிருக்கின்றது. அம்மா! என்னுடைய பெரிய தகப்பனார் அவனை மைசூருக்குத் திவானாக நியமிப்பித்திருக்கின்றார். இன்னும் சொற்பநாளில் அவருடைய முயற்சி வீண்போகாதபடி அவன் அங்குச் செல்லுதல்வேண்டும் என்றான். அப்பொழுது பூங்காவனம் அதற்கேற்றமறுமொழிசொல்ல, சிறிதுநேரம் சம்பாஷித்துவிட்டு எழுந்து செல்லும்பொழுது மங்களத்தைத் தனிமையிற் கண்டு அம்மா! என்னுடைய சகோதரன் பூங்காவனத்துடன் ஐக்கியமாகப் பேசுகிறதை நீர் கவனிக்கவில்லையாவென்றும் இனிமேல் எல்லாம் ஒழுங்காய் வந்துவிடுமென்றும் எங்கள் இரண்டு பேருக்கும் அக்கறையுள்ள அவர்கள் இருக்கவேண்டியமாதிரி ஐக்கியமாய் விடுவார்கள், உம்முடைய ஆராய்வான புத்திக்கு ஒன்றும் நிகரில்லையென்றும் சொல்லிக்கொண்டு அப்புறம்போய்விட்டான்.

சென்ற அத்தியாயத்திற் கூறிய சம்பவங்களெல்லாம்நடந்து ஒரு கிழமையாய்விட்டன. அருட்பிரகாசமும் பூங்காவனமும்எப்பொழுதும் போல் தாய் மகன் முறையான பட்சமாய் அவள்தன் கணவனுக்கும் அருட்பிரகாசம் பெரிய தந்தையாருக்கும் துரோகம் செய்யாதபடி நடந்துகொண்டு வருகின்றார்கள். பொது விஷயங்களை யல்லாமல் நேசத்தைப்பற்றிய வசனங்கள்சொல்லாதிருந்தார்கள். ஜமீன்தாரோவென்றால் அவர்களுக்குள் முன் அறிமுகமும் ஐக்கியமுமிருந்தனவென்றும் அதனால்இப்போது அன்பு உண்டாய்விடுமென்றும் அற்பமேனும் ஐயப்படவில்லை. அவர் தம்முடைய மகனது பெருந்தன்மையையும் மனைவியின் நிர்த்தோஷத்தையும் நினைந்து பெருமிதங்கொண்டிருந்தார். அவர் அப்படி எண்ணியது சரிதான். அவர் அவர்கள் இருவரையும் தனிமையில்விடுவது குற்றமென்றெண்ணவுமில்லை; பொறாமைகொண்டவருமல்லர். அப்படிப் பொறாமை கொள்ளுதற்கு யாதொன்றும் சம்பவிக்கவில்லை. பூங்காவனமும் அருட்பிரகாசமும் அந்த மாளிகையிற் சார்ந்த சிறிது நாட்களாக ஒருவரிலொருவர் அருவருத்திருந்தார்களென்றும் இப்போது அவர்கள் குணம் மாறிவிட்டதென்றும், அவள்தான், அருட்பிரகாசத்தை முன் தெரியாமல் நடந்து

கொண்டதற்குப்பரிகாரம் செய்கிறுளென்றும், அவன் வீரமுள்ள உதாரகுணமாய் அவள் முன் செய்த குற்றங்களை மறந்து மன்னித்துவிட்டானென்றும் எண்ணினர். இன்னும் சிசுபாலன் தமக்கு நல்லபுத்தி சொல்லித்தந்தான்; நான் செய்துகொண்ட உடன்பாட்டில் அவன் வெறுப்புக்கொண்டவனுய் அவளை அப்படி நடத்தினனென்றும் பழுதாக எளிய அருட்பிரகாசத்தின்மீது குற்றம் சுமத்திவிட்டேனே யென்றும் நினைத்தார்.

சிவராமலிங்கம் பிள்ளை,

யாழ்ப்பாணம்.

யுத்தம்.

இப்பொழுது ஐரோப்பாவில் நடந்து வரும் பெரிய யுத்தம் நாளுக்குநாள்உருவத்திலும் வன்மையிலும் மிகுந்துவருகின்றது. இஃது ஐரோப்பா யுத்தமாக முடியாது இறுதியில் உலக யுத்தமாகவே முடிவு பெறுமென்று தோன்றுகிறது. பிரான்ஸைத் திடீரென்று தாக்கித் தன் வசப்படுத்தி விடலாமென்று கருதிய ஜெர்மனியின் நோக்கம் நிறைவேறவில்லை; ஆனுல், பிரான்ஸிலும் பெல்ஜிய எல்லையிலும் ஜெர்மனியருக்கும், பிரிட்டிஷ் பிரஞ்சு பெல்ஜியத் துருப்புகளடங்கிய நேசப்படைகளுக்கும் பலமான யுத்தம் நடந்து வருகின்றது. கிழ்ப் பிரஷியா எல்லையிலும் ருஷியாவிலும் ஆஸ்ட்ரியா கலீஷியாவிலும் ருஷிய, ஜெர்மன், ஆஸ்ட்ரியர்களின் சண்டை உக்கிரமாக நடந்து வருகின்றது. அங்கும் ருஷியரின் பிரமாண்டமான சேனைக்கு முன் ஆஸ்ட்ரிய ஜெர்மனியரின் நிலை பெரிதும் அதிருப்தியாகவே யிருக்கின்றது. சீனுவிலுள்ள கியாச்சோவில் ஜெர்மனியருக்கும், ஜப்பானியருக்கும் நடக்கும் சண்டை நிதானமாக நடந்து வருகின்றது. ஜீவகாருண்யமூர்த்தியான புத்தரின் பக்தர்களான ஜப்பானியர் உயிர்க் கொலை புரிவதில் பெரிதும் விருப்பற்றவர்களானமையால் தங்களின் வன்மையைக் கியாச்சோவிலுள்ள ஜெர்மனியர்மீது நிதானமாகக் காட்டி வருகின்றனர். மறத்தன்மை நிறைந்த ஜெர்மனி போர்ச்சுகல்மீதும் சண்டையாரம்பித்து ஆப்பிரிக்காவில் போர்ச்சுகலுக்குச் சொந்தமான அங்கலோவைத் தாக்கி யிருக்கின்றது. போதாக்குறைக்கு ஜெர்மனி தனது தந்திர வேலைகளால் துருக்கியையுந்தன் வசப்படுத்திவிட்டது. அதனுல் துருக்கி ருஷியா, பிரான்சு, இங்கிலாந்து முதலிய நேச ராஜாங்கங்களுக்கு விரோதமாக வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டது. அதுபற்றி இங்கிலாந்துக்கும் துருக்கிக்கும் சண்டைமூண்டிருக்கிறது. இவ்வாறிருக்கும் நிலைமையில் இந்தயுத்தம் இன்னும் எவ்வளவு காலம் நீடித்து எத்தனை உயிர்களை எமன்வசப்படுத்துமோவென்பதுபற்றி வருந்தவேண்டியதாக விருக்கிறது.